விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 09 செவ்வாய்க்கிழமை (23.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 35

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## புலிகளின் சர்வதேச பேச்சாளராக அடேல்

அண்மையில் காலமான விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி, புலிகளின் சர்வதேச பேச்சாளராக நியமிக்கப்படவுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக இந்தியப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அரசாங்கத்தரப்பில் இருந்து விடுதலைப்புலிகள் கடுமையான சவால்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், சர்வதேச சமூகத்திற்கு புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் பணியை அடேல் சிறப்பாக மேற்கொள்வார் என புலிகள் நம்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களின் போராட்டத்துடனும் தமிழீழ விடுதலைப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா போக்குவரத்துச் சாலை அத்தியட்சகர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மாவட்ட மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சாலையின் அத்தியட்சகர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று மாலை 5.15 மணியளவில் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

[illegible] கொல்லப்பட்டவர் அம்பி என்றழைக்கப்படும் [illegible]சிங்கம் (வயது 46) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்றவர்களே இவர் மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்திவிட்டு [illegible] சென்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து [illegible]ளது. அவரது மரணம் தொடர்பான விசாரணைகளை வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் மேற்கொண்டார். (ச-3,5)

# சமாதானப் பேச்சுக்கு வரும்வரை

# புலிகள் மீது தாக்குதல் தொடரும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்பும் வரை வடக்கு கிழக்கில் தாக்குதல்கள் தொடரும் என அரசு அறிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் தாங்கள் சண்டையை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு திரும்புவதாக அறிவித்தால் இராணுவமும் உடனடியாக சண்டையை நிறுத்தும் என இராணுவ விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு பகுதியில் மோதல் இரு படையினர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் வவுணதீவிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேற முயன்ற படையினரின் முயற்சி தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் முன்னேற முயன்ற படையினர் மீதான இம்முறியடிப்புச் சமரில் இரு படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் நான்கு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சமரில் கொல்லப்பட்ட இரு படையினரின் சடலங்களும் மற்றும் ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகள் தரப்பில் இரு போராளிகளுக்கு மட்டும் சிறு (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து நேற்று 2 இளைஞர்களின் சடலம் மீட்பு

(வவுனியா)

பனை நடவடிக்கைகளுக்காக வாகன மொன்

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு

சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதி

தந்தையுமான டானியல் சாந்தரூபன் (வயது

## 2 இளைஞர்களின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் விற்பனை நடவடிக்கைகளுக்காக வாகன மொன்றில் அந்தப்பகுதிக்கு சென்றிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மரணமானவர்களின் கைகள் கட்டப்பட்ட நிலையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று சடலமாக மீட்பு

சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதியில் கடந்த 15 ஆம் திகதி ஆயுததாரிகளினால் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் நேற்றுக் காலை அதே இடத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையரான பானியல் சாந்தரூபன் (வயது 30) சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேத (04 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமைகளின் மாநாடு 28,29ஆம் திகதிகளில் காலியில்

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் மாநாடு எதிர்வரும் 28ம்,29ம் திகதிகளில் காலி லைட் ஹவுஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் சுமார் 50 நாடுகள் கலந்து கொள்ளவுள்ள இம்மாநாட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் கொண்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

50 நாடுகளிலிருந்து நிதி அமைச்சுடன் தொடர்பான 300 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் இதில் அடங்குவார்கள்.

தேசியப் பாதுகாப்பு தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் மீது தாக்குதல் வவுனியாவில் நேற்று சம்பவம்

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதி குருமன்காட்டுச் சந்திப் பகுதியில் நேற்று பொலிஸார் மீது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் உட்பட இருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பொலிஸார் திருப்பி தாக்கியதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின் போது பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரே கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

## அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை குடியமர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் விவசாயிகளை மீள்குடியேற்றுவதற்கான உயர் நீதிமன்ற உத்தரவை துரிதமாக செயல்படுத்துமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை இதுவரை செயற்படுத்தாமையை கவனத்தில் கொண்டு உயர்நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்பட விவசாயிகள் குழுவொன்று தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவிற்கு ஏற்ப உயர் நீதிமன்றம் இந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்ட[illegible]

கிழக்கு பல்கலைக்கழக துணைவே[illegible]ராகப் பணியாற்றிய பேராசிரியர் எஸ்.[illegible]திரநாத் கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி கொ[illegible]பில் வைத்து காணாமல் போனதையடுத்து கடந்த ஒரு மாத காலமாக மூடப்பட்டிருந்த கிழக்கு பல்கலைக்கழகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பொது மக்களை பாதுகாக்க யு.என்.எச்.சி.ஆர். வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை மீதான படை நடவடிக்கைகளை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் நிலையில் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசையும் விடுதலைப் புலிகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அமைப்பின் யு.என். எச்.சி.ஆர். வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பேச்சாளர் ரொன் ரெட்மொன்ட் கூறியதாவது,

அரசும் விடுதலைப் புலிகளும் அனைத்துலக விதிகளை மதிப்பதுடன் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுமதியளிக்க வேண்டும். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடக்கும் போரில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டும் 465ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்தும் உள்ளனர். இதில் தற்போதைய மோதல்களால் இடம்பெயர்ந்த 2இலட்சத்து 5 ஆயிரம் மக்களும் அடங்குவர்.

தற்போதைய வாகரை படை நடவடிக்கைகளுக்கு முன்னர் 9ஆயிரத்து 500 மக்கள் எஞ்சியிருந்தனர். அவர்களும் தற்போது இடம்பெயர்ந்துள்ளனர். இது ஒரு மாதத்தில் இடம்பெற்ற இரண்டாவது பாரிய இடப்பெயர்வாகும் என்றார் அவர். (ச-5)

# புதிய பாடவிதானத்துக்கான ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி இணையத்தில்

(கொழும்பு)

இந்த வருடம் தொடக்கம் முதலாம் இரண்டாம் தரங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய பாடவிதானத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியையும் தேசிய கல்வி நிறுவக இணையத்தளத்தில் பார்வையிடலாம் என தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வி பிரிவு அறிவித்துள்ளது.

ஆரம்பக்கல்வியின் முதன்மை நிலை ஒன்றில் உள்ளடக்கப்படும் முதலாம் ,இரண்டாம் தரங்களுக்கான பாடவிதானம் இந்த வருடம் தொடர்ந்தும் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி என்பன இதுவரை அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை.

தற்பொழுது புத்தகவடியில் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கும். 1ஆம்,2ஆம் தரங்களுக்கான பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியும் தேசிய கல்வி நிறுவகத்தின்www.nie .lk இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனைப்பார்வையிட்டு பாடசாலைகளின் உடனடித்தேவைக்கு உரிய பகுதியை பெற்றுபயன்படுத்துமாறு தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக்கல்வி பிரிவு செயற்றிட்ட அதிகாரி வி. என்.எஸ். உதயச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளார். (ச-5)

# சிலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு சித்தமருத்துவ கலாநிதி அருட் பணிச்செல்வர் தம்பையா சோமசேகரத்தின் திருவுருவச்சிலை நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி நந்தவனத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

சமய, சமூக , மருத்துவ பணிகள் புரிந்த அவரின் ஞாபகார்த்தமாக அவர் அமரத்துவமடைந்த ஓராண்டு நினைவு தினமான எதிர்வரும் 28ஆம் திகதி காலை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி மாரிமுத்து வேதநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச)

# பிரமுகர்கள் பயணிக்கும் வீதிகளை பாதுகாப்பு வலயமாக்க முயற்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடிய 7 பிரமுகர்கள் பயணிக்கும் கொழும்பின் பிரதான போக்குவரத்துப் பாதைகளை கிரீன் சோன் (அதி பாதுகாப்பு வலயம்) என பெயரிட்டு அவ்வலயத்தில் பிரவேசிக்கும் வாகனங்கள் மற்றும் நபர்கள் குறித்து விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்பு பிரிவின் உயரதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தீர்மானங்களின் அடிப்படையில் மேற்படி வலயத்தினுள் வேறு பிரதேசவாசிகள் பிரவேசிக்க முடியாதெனவும் விடுதலைப் புலிகளால் மிகவும் நுணுக்கமான முறையிலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்தே இத்தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (எ-5)

# நேர்முகத்தேர்வுக்குச் செல்லும் கல்வியியலாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வியியலாளர் நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பெற்று தற்போதைய சூழ்நிலை காரணமாக குடாநாட்டிலிருந்து நேர் முகப் பரீட்சைக்கு தோற்றமுடியாதுள்ள பரீட்சார்த்திகளை இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திற்கு வருகை தந்து தமது பெயர்களை பதிவு செய்யுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச)

# ப.நோ.கூ. சங்க கிளைகளில் நேற்று இருப்புக் கணிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் நேற்று இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பிரதேச செயலர்களினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளால் இக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட இருப்புக் கணிப்பீட்டின் விபரங்கள் இன்று யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் அடுத்த கட்ட உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக தீர்மானிக்கப்படும் என அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் சில பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நானாவிதப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கொக்குவில் கிழக்குப் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் நடமாடும் திருடர்கள் வீட்டின் வாயிற் கதவுகளை தட்டுவதாக மக்கள் கூறுகின்றனர்.

இதனால் அப்பகுதி மக்கள் பதற்றத்துடன் இரவைக் கழிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று அதிகாலை நந்தாவில் பகுதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் திருட்டு முயற்சியில் இறங்கிய வேளை வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக கூறப்பட்டது. (எ)

# பயண ஒழுங்குகளை பதிவு செய்ய மாணவர்களிடம் கோரிக்கை

தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கான விசேட மீள் பரீட்சை மற்றும் பொது இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வெளிமாவட்ட மாணவர்களுக்கான பயண ஒழுங்குகளை அதிபர் ந.யோகராஜன் மேற்கொண்டுள்ளார்.

பயணத்தை மேற்கொள்ளவுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் தமது பயண ஒழுங்குகளை யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி பதிவாளரிடம் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

# கடத்தல்,காணாமல் போனமை குறித்து நேற்று நான்கு முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று இரவு இருவர் ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த வேலாயுதம் எமில் பிரமிற்றன் (வயது 26) என்ற இளைஞனை நேற்று அதிகாலை 1.20 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர் என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் அவ் வீட்டில் இருந்தவர்கள் குறித்து விசாரணை செய்தனர் எனவும் அப்போது குறித்த இளைஞன் அயலில் உறவினர் வீட்டில் உள்ளார் என குறிப்பிட்ட வேளை அவரை அங்கு சென்று அழைத்துச் சென்று தலையாட்டி முன் நிறுத்தி அழைத்துச் சென்றனர் என அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் சிற்றம்பலம் புவனேந்திரன் (வயது 45) என்ற குடும்பஸ்தரை விசாரணைக்கென ஆயுததாரிகள் கூட்டிச் சென்று இதுவரை விடுதலை செய்யவில்லை என உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி மடத்தடி 2 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கஜேந்திரன் (வயது 21) என்ற இளைஞன் கடந்த 18 ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கடை ஒன்றுக்கு வேலைக்குச் சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாலையம்மன் கோயிலடி திருநெல்வேலி கிழக்கைச்சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான குமாரவடிவேலு சுதாகரன் (வயது 38) என்பவரை கடந்த சனிக்கிழமை இரவு 12.30 மணியளவில் வீட்டிற்கு இராணுவச் சீருடையில் வந்தவர்களால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை என நேற்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-3,5)

# விவேகானந்தர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையில் இந்து மன்றத்தால் நடாத்தப்படும் விவேகானந்தர் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை சேவாச்சிரம சுவாமிஜி சித்ரூபானந்தா கலந்து கொள்கிறார். (ச)

## கண்ணீர் அஞ்சலி

வலம்புரி நாளிதழின் ஆசிரியர் திரு.நா.சண்முகானந்தன் அவர்களின் அன்புச் சகோதரர்

**நாகநாதபிள்ளை பரமலிங்கம்**

அவர்கள் மறைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்

# ஜே.வி.பியின் எம்.பி அரசில் இணைவு?

ஜே.வி.பியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க ஜே.வி.பியிலிருந்து விலகி மகிந்த அரசில் இணையவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக குணதிலக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஆலோசனை நடத்தி யதாகவும் அவர் அரசுக்கு ஆதரவளித்தால் அவரை சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)




## காரைநகர் பயிரிக்கூடல்

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2007

முருகன் அடியார்களே!

| | | |
|---|---|---|
| 2007.01.24 | புதன்கிழமை | கொடியேற்றம் |
| 2007.01.30 | செவ்வாய்க்கிழமை | வேட்டை |
| 2007.01.31 | புதன்கிழமை | பெரிய சப்பறம் |
| 2007.02.01 | வியாழக்கிழமை | தேர் |
| 2007.02.02 | வெள்ளிக்கிழமை | தீர்த்தம்,கொடியிறக்கம் |
| 2007.02.04 | ஞாயிற்றுக்கிழமை(காலை) | வைரவர் பொங்கல் |

மஹோற்சவகுரு: பிரம்மஸ்ரீ.கு.சண்முகராஜக்குருக்கள் (ஆலயகுரு)

இங்ஙனம்,
திருவிழா உபயகாரர்கள்.

(741)

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

—திருக்குறள்

வலம்புரி

## யுத்தத்தில் சிக்குண்ட சித்த மருத்துவம் மீட்டெடுக்கும் முயற்சிகள் தேவை

தமிழர்கள் தமக்கென இருக்கக்கூடிய எல்லா வளங்களையும் அருங்கலைப் பொக்கிஷங்களையும் படிப்படியாக இழந்து வருகின்றனர்.

தமிழர்கள் தனித்துவமான பண்பாட்டின்-கலைத்துவத்தின் சொந்தக்காரர்கள் என்ற உரிமையை இழந்து வரும் பரிதாபத்தைத் தடுக்க யாருமே முன்வரமாட்டார்களா? என்ற ஏக்கம் தமிழினத்தின் பெருமையை அறிந்தவர்களிடம் இருக்கவே செய்கிறது.

அரசியல்-பொருளாதாரம்-சமூகப்பாரம்பரியம் என்பவற்றில் தமிழர்களுக்கு தொன்மையான வரலாறுகள் உண்டு என கூறப்படுகின்ற போதிலும் அவற்றின் ஆதாரங்கள்-ஆவணங்கள் பேணப்படவில்லை என்பது ஈழத்தில் பெரும் குறைபாடாகவும் எமது வரலாற்றுத் தொன்மையை நிரூபிக்கமுடியாத நிலைக்கும் ஆளாகியுள்ளது.

இதில் தமிழர்களின் பூர்வீக சொத்தில் ஒன்றாக இருக்கக்கூடிய சித்தமருத்துவமும்,சமகால யுத்த சூழலுக்குள் சிக்குண்டு சிதறும் பரிதாபம் கவனிக்கப்படவேண்டியதாகும்.

மேற்கத்தைய மருத்துவம் எத்துணை வளர்ச்சி கண்டிருந்த போதிலும் சித்தமருத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் கணிசமான தொகையினர் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

குறிப்பாக குழந்தைகள், முதியவர்களின் சிகிச்சையில் சித்தமருத்துவத்தின் பங்களிப்பு இன்னமும் உச்சமாகவே இருக்கின்றது.

குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணை மற்றும் சளிபோன்றவற்றில் இருந்து காப்பாற்றும் கோரோசனைகள் முதல் முதியவர்களுக்கு ஏற்படக்கூடிய வாதம், பித்தம்,சிலேப்பனம் போன்றவற்றுக்கான எண்ணை ,சூரணங்கள்,மூலிகை குழம்புகள் வரை சித்த மருத்துவத்தின் முக்கிய மருந்துகளாகும்.

எனினும் இவற்றைத் தயாரிப்பதில் குடாநாட்டு சித்தமருத்துவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு வழங்கக்கூடிய எண்ணை வகைகளை தயாரிப்பதற்கு மூலப்பொருளாக இருக்கக்கூடிய நல்லெண்ணைக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு போத்தல் நல்லெண்ணை ஆயிரம் ரூபாவைத் தாண்டி விற்பனையாகும் நிலையில் சித்த மருத்துவத்தில் எண்ணை தயாரிப்பது முடியாத காரியமே.

இதுபோன்ற ஏனைய மூலிகைகளுக்கும் நிலவும் தட்டுப்பாடு சித்தமருத்துவத்தின் நீடிப்புக்கு குந்தகமாகவே அமைகின்றது. எனவே இது விடயத்தில் யாழ்.அரச அதிபர் தலையிட்டு யுத்தத்தில் சிக்குண்டுள்ள யாழ்ப்பாணத்து சித்த மருத்துவத்தைக் காப்பாற்ற உதவவேண்டுமென்பது சித்தர்கள் தந்த சீரிய வைத்தியத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் கோரிக்கையாகும்.

யுத்த காலங்களில் நிகழும் இனத்துவ அழிப்புகளினால் பாரம்பரிய சொத்துக்களை அழிப்பதும் வரலாறு கண்ட உண்மை என்பதால் அதனை உணர்ந்து எமது வளங்களை காப்பாற்ற அனைத்து முயற்சிகளும் எடுப்பது காலத்தின் தேவையாகும்.

# 4700 தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடுபூராகவும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் 4 ஆயிரத்து 700 பேரை ஆசிரியர் உதவியாளர்களாக சேர்த்துக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு ஈடுபட்டதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சையில் சித்தியடைந்த அதே சமயம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை சேவை முறிவடையாமல் தொடர்ச்சியாக மூன்று வருடகாலம் சேவை புரிந்த தொண்டர் ஆசிரியர் அனைவருக்கும் மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் ஆசிரியர் உதவியாளராக நியமிக்கப்படவுள்ளனர்.அவர்கள் பல்கலைகழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் உட்பட இவர்களுக்கு விதிக்கப்பட்ட பல்வேறு நிபந்தனைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

ஆகக்குறைந்த தகைமைகளை பெற்றுள்ள தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.இவர்கள் நியமனம் பெற்று ஐந்து வருடகாலத்திற்குள் தொழில் தகைமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தொழில் தகைமையை பெறுவோர் நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார். இவர்களுக்கு தொழில் தகைமையை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் பல்கலைக்கழகங்கள்,கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

பல வருடகாலமாக எதுவித வேதனமும் இன்றி தொண்டர் அடிப்படையில் கடமையாற்றிவரும் 4 ஆயிரத்து 700 பேரை ஆசிரியர் உதவியாளராக நியமிப்பதற்கான அனுமதியை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான அமைச்சரவை உப குழுவின் அறிக்கைக்கு அமைய,அமைச்சரவை அண்மையில் வழங்கியதை அடுத்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் !'ாவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஊடாக வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து தற்போது கோரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

# தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ இன நல்லுறவை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்

## அமைச்சர் பேரியல் அஷ்ரப் உரை

(மட்டக்களப்பு)

நான்கு சுவர்களுக்கு மத்தியில் நாம் இருந்து கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதானத்தை கொண்டு வருவார் என கனவு காண்பதை விடுத்து இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் முதலில் தனக்குள்ளும் தனது குடும்பத்திற்குள்ளும் சமாதானத்தை தோற்றுவித்து பின்னர் அயலவர்களுடனும் பிற இனத்தவர்களுடனும் சமாதான சுக வாழ்வை பகிர்ந்து அதனைப் பலப்படுத்தி பாதுகாக்கும் போதே சகல மக்களும் நிம்மதியாக வாழும் சூழ்நிலை பிறக்கும்.

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான ஜானாபா பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் குறிப்பிட்டார்.

கல்முனை வடக்குப் பிரதேசத்தில் உள்ள தமிழ்- முஸ்லிம் பாடசாலையில் இருந்து கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் சாதாரண தரப்பரீட்சையில் 10 ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மருதானையில் சமஸ் மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பேரியல் அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். அழிந்து போன இன நல்லுறவுகள் மேலும் கட்டியெழுப்பப்படவேண்டும்.

வெறுமனையே நாம் வெண்புறாக்களை பறக்கவிடுவதாலும் வாய்ப் பேச்சாலும் சமாதானத்தை கொண்டுவர முடியாது. இத்தகைய வைபவங்கள் மூலமாக இன ஐக்கியத்தை கட்டியெழுப்பமுடியும். அன்று நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் தமிழ்-சிங்கள மாணவர்களுடன் விளையாடினோம். ஒன்றாகக் கதைத்து மகிழ்ந்தோம். இன்று மாணவர்களுக்கு கல்விச் சுமை அதிகம். காலையில் இருந்து இரவு வரை பாடசாலையும் ரீயூசன் வகுப்புமாகவுள்ளது.

இதனால் மாணவர்கள் நாம் எங்கு வாழ்கிறோம். எமக்கு அருகில் எந்த இனத்தவர், மதத்தவர் வாழ்கின்றார்கள் என்று அறியமுடியாதநிலையில் உள்ளனர். இந்த நிலை ஆபத்தானது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

விளையாட்டுக் கழகங்களுக்கு நான் பொதுவான வேண்டுகோள் விடுகிறேன். எமது மாணவர்களுக்கு ஓய்வு கிடைக்கும் வேளையில் அவர்களை ஒன்று திரட்டி பாடப்புத்தகங்களில் இல்லாத விடயங்களை அதாவது பிற இன மத கலாசாரங்கள் பற்றியும் அவற்றுக்கு இடமளிக்கவேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக்கூற வேண்டும்.

அனைத்து இன மாணவர்களும் ஒட்டி உறவாட சந்தர்ப்பமளிக்கப்படவேண்டும். இதன் தாக்கம் சமாதானக் கீற்றுத் தென்படவும் வலுவடையவும் வித்திடுமென்றார். (எ-1)

# மஹிந்தவின் சிந்தனையை மீறும் அரசை தோற்கடிக்க வேண்டும்

## ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பு மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை மீறும் வகையிலேயே இடம் பெறும் அபாயமுள்ளது. மஹிந்த சிந்தனையை மீறும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை தோற்கடிக்க ஜே.வி.பி மக்களை இணைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்துள்ளது.

விரைவில் இடம்பெறவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பாக கேட்டபோதே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித தேரர் தெரிவித்தார்.

விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம் பெறவுள்ளதாக கூறப்படுகின்றது.தற்போதைய நிலைமையில் இருக்கின்ற அமைச்சரவையும் மஹிந்த சிந்தனையை மீறும் வகையிலேயே உள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பாக நாங்கள் விமர்சனங்களை முன்வைத்துள்ளோம். இந்நிலையில் எதிர்வரும் வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பும் கட்டாயம் மஹிந்த சிந்தனையை மீறும் வகையிலேயே அமையும். காரணம் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ள சமஷ்டிவாதிகளுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதால் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அரசாங்கம் தொடர்ந்து மஹிந்த சிந்தனையை மீறி வருகின்றது. இந்நிலையில் ஜே.வி.பியும் தொடர்ந்தும் மௌனமாக இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ள ஜீ.எல்.பீரிஸ், ராஜித சேனாரட்ன மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோர் சமஷ்டியை ஆதரிக்கின்றவர்கள். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தையும் விற்றுவிடக் கூடியவர்கள் என அவர் தெரிவித்தார். (ச-5)

# கண்ணீர் வடிக்கும் அனுமன் சிலை

(மதுரா)

சில வருடங்களுக்கு முன் இந்தியாவிலும் இலங்கையிலும் விநாயகர் பால் குடிப்பதாக தகவல் பரவியது. நாடு முழுவதும் உள்ள விநாயகர் சிலைக்கு பக்தர்கள் பால் ஊற்றி வழிபட்டனர். இதேபோல் தற்போது அனுமன் சிலையில் இருந்து கண்ணீர் வடிவதாக பரப்பப்பட்ட தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலத்தில் புனித நகராக கருதப்படும் மதுராவில் ஆக்ரா வீதியில் ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் காலை சுவாமி கும்பிட வந்த பக்தர் ஒருவர் அனுமான் சிலையிலிருந்து கண்ணீர் வடியும் காட்சியை தான் பார்த்ததாகக் கூறியுள்ளார்.

இது குறித்து பூசாரி மற்றும் அர்ச்சகரிடம் கூறியுள்ளார். அவர்கள் வந்து பார்த்த போது அனுமன் சிலையில் அனுமனின் கண்களில் இருந்து முத்து முத்தாக நீர் வடிந்தது.

இந்த தகவல் காட்டுத் தீ போல் மதுரா நகர் முழுவதும் பரவியது. இதைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு படையெடுத்தனர். அவர்கள் அனுமனுக்கு விசேட பூஜைகள் நடத்தி வழிபட்டனர். (ச-5)

# வடமராட்சி மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு

வடமராட்சிப் பாடசாலைகள் நேற்று மாணவர்களின் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. வடமராட்சிப் பிரதேச மாண வர்களான; வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் பரஞ்சோதி தனஞ்சயன்,ஹாட் லிக் கல்லூரி மாணவன் முருகானந்தன் பரமானந்தன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி இப்பகிஷ்கரிப்பு போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பை வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்திருந்தது.இம் மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் இன்றும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (எ)

# அரசியல் தஞ்சம் கோருவோருக்கு சாதகமான முடிவை வழங்கவும்

## சர்வதேசத்திடம் ஐ.நா.கோரிக்கை

இலங்கையில் இருந்து அரசியல் தஞ் சம் கோருவோரின் விண்ணப்பங்களை சாதகமாக பரிசீலிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானி கராலயம் அனைத்துலக நாடுகளை கோரி யுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அறிக் கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களும் வன்முறைகளும் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பாக வடக்கு கிழக்கு இலக்கு வைக் கப்பட்டு தாக்குதல்களுக்கு உள்ளாகும் தமிழர்களுக்கு மாற்றிடங்களில் வாழ்வதற் கான சூழ்நிலை காணப்படவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு இலங்கை யின் வடக்கு கிழக்கில் வாழும் மக்களால் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்களை சாதகமாக பரிசீலிக்குமாறு கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (ச)

# பஞ்சதள இராச கோபுர மகா கும்பாபிஷேகம்

(துன்னாலை)

வடமராட்சி கரவெட்டி வெல்லன் வீரகத் திச் சேதக விநாயகர் ஆலய பஞ்சதள இராச கோபுர பிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெற உள்ளது.

ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ வே.கனக சபைக்குருக்கள் தலைமையில் விநாயகப் பெருமானுக்கும் முருகன் ,வைரவர் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பஞ்சதள இராச கோபுரத்திற்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இப்பஞ்சதள இராச கோபுரம் தமிழ்நாடு மஹாபலிபுரத்தைச் சேர்ந்த ஸ்தபதி சி.ஞான மூர்த்தி தலைமையிலான சிற்பக் கலைஞர் களால் உருவாக்கப்பட்டுள்ளது. (ச-101)

## கிழக்குள்...

அலுவலகப் பணிகள் தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர்களுக் கான வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்ப டும் என்றும் துணைவேந்தர் கலாநிதி என். பத்மநாதன் கூறினார். (ச)

## இணைத்...

செயற்பாடுகள் குறித்தும் அவற்றைத் தொடர்ந் தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக வும் கருத்துக்கள் தெரிவிக்கப்படவுள்ளன.

இதேவேளை மனித உரிமைகளை மீறும் எந்தவொரு செயற்பாடுகளிலும் அரசாங்கம் ஈடுபடுவதில்லை என்பது குறித்து சர்வதேச பிரதிநிதிகளுக்கு இம்மா நாட்டில் அரசாங்கம் தெளிவுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டின் கூட்டத் தொடரை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ மாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ச)

## வவுனியாவிலிருந்து...

இருந்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இவ்வாறு இறந்தவர்களின் வசம் எந்த விதமான ஆவணங்களும் இல்லாமை யினால் அவர்கள் இதுவரை அடையாளம் காணப் படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பயணம் செய்த வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை கடந்த 19 ஆம் திகதி இவ்விடத்தில் மூன்று இளைஞர்க ளின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் இதே வேளை நேற்று இடம் பெற்ற சம்பவத்திற்கும் தொடர்பு இருக்க லாமெனவும் வவு னியா பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ள னர். (ச-3)

# மரண அறிவித்தல்



## நாகநாதபிள்ளை பரமலிங்கம்

(உரிமையாளர்-லிங்கம் ஸ்ரோஸ், கொழும்பு உரிமையாளர்-லிங்கம் செரமிக், யாழ்ப்பாணம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதபிள்ளை பரமலிங்கம் 21.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதபிள்ளை-பார்வதிப்பிள்ளையின் மகனும்,காலஞ்சென்ற செல்லம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற செல்லப்பா-பார்வதிப்பிள்ளையின் மருமகனும், பங்கசாம்பாளின் அன்புக் கணவரும், உதயகுமாரன் (உரிமையாளர் லிங்கம் செரமிக்-யாழ்ப்பாணம்),நந்தகுமாரன் (கனடா), அருள்மொழி, அன்புமொழி (ஆசிரியை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), தேன்மொழி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

வத்சலா, ருக்மினிதேவி, தெட்சணாமூர்த்தி (வைத்திய அதிகாரி- மட்டக்களப்பு), சத்தியபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மங்கையற்கரசி, இரட்ணேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சண்முகானந்தன் (ஓய்வுபெற்ற படவரைஞர், நில அளவைத் திணைக்களம்), ஜெகதீஸ்வரி (ஓய்வுபெற்ற வங்கியாளர்) மற்றும் காலஞ்சென்றவர்களான சோமேஸ்வரி,லோகநாதன் ஆகியோரின் அன்பு அண்ணாவும், சத்தியேஸ்வரி, குகதாசன் (உரிமையாளர் குகன் மோட்டோஸ்-கொழும்பு), இராமச்சந்திரன் (லண்டன்), அன்னலிங்கம் (குகன் மோட்டோஸ்-வவுனியா), யோகலிங்கம் (லண்டன்), கனகாம்பிகை (கனடா), பத்மநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), யோகநாதன், வனஜா (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு இடம் பெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

160.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி

ப.உதயகுமார்ரன்
(மகன்)

(C-600)

# வட.-கிழக்கு மக்களை பாதுகாப்பதே அரசாங்கத்தின் முக்கிய இலக்காகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

வடக்கு கிழக்கு மக்களை சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அந்த நட வடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற அரசாங் கத்தின் செயற்பாடுகளுக்கு பாதுகாப்பு படை யினரும் பூரணமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர் என்று ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

இராணுவம் கைப்பற்றியதை அடுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமாயின் சகலரும் ஒன்றிணைய வேண்டும். இராணுவத்தின ரால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் பாதுகாப் பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் சிவில் மற்றும் ஜனநாயக உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக பாதுகாப்பு படையினர் கடந்த காலங்களில் முயற்சித்து வந்தனர் என்பதால் அவர்களுக்கு ஜனா திபதி என்ற வகையில் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இதேவேளை இக்காலப்பகுதியில் பாது காப்புப்படையினர் தைரியமாக செயற்பட்ட தனால் கிழக்கு மாகாணத்தில் 95 சதவீதமான அப்பாவி பொதுமக்களை மீட்க முடிந்தது.

கிழக்கு மாகாணத்தில் கிடைத்த வெற்றி அரசாங்கம் உள்ளிட்ட சமாதானத்தை விரும் புகின்ற சகலருக்கும் கிடைத்த வெற்றியாகும்.

'கடந்த காலத்தில் மாவிலாறு அணைக்கட் டை மூடியதனால் பாதிக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்பதற்கும் சேருநுவர மற்றும் சோமாவதி போன்ற பயங்கரவாத அச்சுறுத் தல்களுக்கும் பாதுகாப்பு படையினரால் முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது என்றார். (ச)

# குவைத் தூதுக்குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

மூன்று நாள் உத்தியோபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்து ள்ள குவைத் வர்த்தக மற்றும் கைத் தொ ழில் அமைச்சர் தலைமையிலான தூதுக் குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வைச் சந்தித்து உரையாடினர். இச்சந்திப்பு அலரிமாளிகையில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளேயின் அழைப்பின் பேரில் இலங் கை வந்துள்ள இத்தூதுக் குழுவினர் முத லீட்டு அபிவிருத்தியமைச்சர் ரோஹித போகொல்லாகமவுடனும் தனியாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த் தக நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி யுடன் பேச்சுவார்த்தை நடத்திய இத்தூதுக் குழுவினர் எதிர்காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளவுள்ளவர்த்தக முன்னெடுப்புக் கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சந்திப்பின் போது அமைச்சர்களான ரோஹித போகொல்லாகம, ஜெயராஜ் பெர் னாண்டோ புள்ளே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)

## அதியுயர் பாதுகாப்பு...

உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தங்களின் பாரம்பரிய விவசாயக்காணி கள் உள்ளடங்கிய பிரதேசம் அதி உயர் பாது காப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதால் தங்களுடைய விவசாய நடவடிக்கைகள் தடைப்பட்டமை அடிப்படை உரிமையை மீறு வதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு நிவார ணம் வழங்குவதற்காக அரசாங்கம் 36 மில் லியன் ரூபாவை மாதாந்தம் செலவிட்டுவருவ தாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்சமயம் நலன்புரி நிலையங்களில் தங் கியுள்ள சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதேச வாசிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் குடியமர்த்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-3)

## சமாதானப் பேச்சுக்கு...

விடுதலைப்புலிகள் அனைத்து வன்முறைகளையும் நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு திரும்புவதாக அறிவித்தால் இராணுவமும் உடனடியாக சண்டையினை நிறுத்தும் என ரொய்டர் செய்தி நிறுவனத்திற்கு இராணுவ விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எனினும் பேச்சுவார்த்தை நடைபெறும் வேளையில் அவர் கள் வன்முறையில் ஈடுபட்டு எந்த சமூகத்திற்கேனும் தீங்கு விளை விக்க முற்பட்டால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டும் நாட்டின் தலைவரும் பாதுகாப்புத்தரப்பினரும் பொறுப்புடன் செயற்படுவார்கள் என் றும் அவர் கூறினார்.

கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகளிடம் இருந்தும் தமிழ் மக்களை விடுவிக்கும் நடவடிக்கைகளிலேயே அரச படை யினர் ஈடுபட்டதாகவும் இந்த விடயத்தில் தமக்கு சக்தியும் பொறுப்பு ணர்வும் இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு சமூகத்திற்கு யாரும் தீங்கு விளைவித்தால் அந்த மக்களை விடுவிக்கும் பொறுப்பு நாட்டின் தலைவரான ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் அரசாங்கம் தனது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும் என்ற கொள்கையில் அரசாங்கம் தொடர்ந்து இருப்ப தாகவும் அவர் ரொய்டருக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தீர்வுக்கான தங்களது அர்ப்பணிப்பை அரசாங் கம் வெளிப்படுத்த வேண்டும் என விடுதலைப் புலிகளின் இராணு வப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ச-3)

## கடத்தப்பட்ட...

பரிசோதனையின் பின் உறவினரிடம் ஒப்ப டைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-3,5)

## வவுணதீவு...

காயங்கள் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினர் நடத்திய எறிகணைத் தாக்கு தலில் பொதுமக்களின் இரு வீடுகள் சேதம டைந்துள்ளன. படையினரிடமிருந்து ஆர். பி.ஜி.-01,பி.கே.எல்.எம்.ஜி-01, வானொலி தொடர்பு சாதன தொகுதி-01, கைக்குண்டு கள் 10 போன்ற ஆயுதங்கள் கைப்பற்றப்பட் டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொல்லப்பட்ட இரு படையி னரது சடலங்கள் நேற்று அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.விடுதலைப்புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்த சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாழைச்சேனை நாசிவன் தீவுப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட் டுச் சம்பவத்தில் 16 வயது இளைஞன் படு காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-3,5)

## புலிகளின்...

புலிகளுடனும் நீண்டகால தொடர்புவைத் துள்ள அடேல், தமிழீழ விடுத லைப்புலிகள் கலந்து கொண்ட பல பேச்சு வார்த்தைகளில் பாலசிங்கத்திற்கு உதவியாளராக கலந்து கொண்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.